## இரத்தினபுரி பிரதேச சபை
## இரத்தினபுரி மாவட்டம்

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மே 02 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 11 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 நவம்பர் 20 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இரத்தினபுரி பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 01 இன் 21 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பின்வரும் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(i) காசுப்பாய்ச்சல் கூற்று

(ii) பாதீடப்பட்ட தொகைக்கும் உள்ளபடியான தொகைக்கும் இடையிலான ஒப்பீடு அல்லது நிதிக்கூற்றுக்களில் பாதீடப்பட்ட தொகை தனியான நிரலாகக் காண்பித்தல்

#### 1.3.2 கணக்கீட்டுக் கொள்கை

நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது பின்பற்றப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபைக்குச் சொந்தமான ஜேசீபீ இயந்திரம் சபையினால் மேற்கொள்ளப்படுகின்ற நேரடியாக வேலைகளில் ஈடுபடுத்துவதற்காக சபைக்கு ஏற்படுகின்ற வருமானம் மீளாய்வாண்டின் போது ரூபா 2,542,100 ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அப்பெறுமதி சபையின் வருமானமாக நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 ஆம் ஆண்டில் கொடுப்பனவு செய்யப்பட்ட 2013 ஆம் ஆண்டின் செலவின விடயத்திற்குரிய ரூபா 222,138 தொகையான பொறுப்புக்கள் 2013 ஆம் ஆண்டில்

கடன்கொடுத்தோர் மீதிக்கு கொண்டு வரப்படாமையின் காரணமாக ஆண்டின் இறுதியில் கடன்கொடுத்தோர் மீதி அப்பெறுமதியினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் செலவினமும் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) வழுக்களுடனான கணக்கீட்டின் காரணமாக முன்னைய ஆண்டின் இறுதியில் தீர்க்கப்படாத முற்பணம் ரூபா 338,848 இற்குரிய கடன்கொடுத்தோருக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவினத் தலைப்பில் சீராக்கப்பட்டிருந்தது.

(ஈ) முன்னைய ஆண்டின் மிகைப் பற்றுச்சீட்டிடல் காரணமாக மீளாய்வாண்டில் நீதிமன்றத் தண்டப்பண வருமானங்களுக்குரிய நிலுவை வருமான மீதி (கடன்பட்டோர்) ரூபா 2,481,359 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அது பேரேட்டுக் கணக்கின் மூலம் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2012 நவம்பர் மாதம் முதல் எவ்வித முத்திரைக் கட்டண வருமானமும் சபைக்குக் கிடைத்திருக்காததுடன் 2013 ஆம் ஆண்டிற்காக பற்றுச்சீட்டிடப்பட்ட முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 5,000,000 தொகை மாத்திரம் நிலுவை வருமானமாக காண்பிக்கப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை முத்திரைக் கட்டண வருமானம் குறை ஒதுக்கமாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரம் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 10,000 தொகை குறைவாகவும், தளபாடமும் பொருத்திகளும் ரூபா 10,000 தொகை அதிகமாகவும் நாட்குறிப்புப் பதிவுகளின் மூலக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(எ) முன்னைய ஆண்டில் காணப்பட்ட உள்ளூராட்சி தொடர்பான உயர் டிப்ளோமாவிற்காக உறுப்பினரொருவருக்காகச் செலுத்தப்பட்ட ரூபா 40,000 தொகையான பாடநெறிக் கட்டணம் திரண்ட நிதியத்தில் சீராக்குவதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் செலவினத்தில் சீராக்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் பற்றாக்குறை அப் பெறுமதியால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 204,745 பெறுமதியான நிலையான சொத்துக்கள் நிலையான சொத்துக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு காசேட்டின் பிரகாரம் மீதி ரூபா 1,795,768 தொகையும், வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் காசு மீதி ரூபா 1,785,868 தொகையும், பிரதான பேரேட்டின் பிரகாரம் காசு மீதி ரூபா 2,142,405 தொகையும் ஆக பிரதேச சபையின் காசுக் கணக்கின் மீதியில் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### 1.3.4 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

08 கணக்கு விடயங்களுக்குரிய 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கட்டுப்பாட்டுக் கணக்கின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 17,253,858 ஆக இருந்ததுடன், அதற்குரிய உபயோகப் பதிவேடுகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 14,791,323 ஆக இருந்தமையால் ரூபா 2,462,535 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பிரதான பேரேட்டில் நீண்ட காலமாக செயற்பாடற்றுக் காணப்பட்ட 07 கணக்குகளுக்குரிய ரூபா 218,746 கூட்டுத்தொகையான சொத்துக்களுக்கும் பொறுப்புக்களுக்கும் உரிய எந்தத் தகவல்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாண ஏற்பாடுகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) | நிதிப்பிரமாணம் 371 | 2005 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை 12 சந்தர்ப்பங்களின் போது செலுத்தப்பட்ட ரூபா 215,048 கூட்டுத்தொகையான முற்பணம் 2014 ஏப்ரல் 08 ஆந் திகதி வரையும் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 371(2) | மீளாய்வாண்டின் போது ரூபா 20,000 எல்லையினை கருத்திற்கொள்ளாது 10 சந்தர்ப்பங்களின் போது ரூபா 653,500 கூட்டுத்தொகையான முற்பணம் விடுவிக்கப்பட்டிருந்தது. |
| (iii) | நிதிப்பிரமாணம் 1645 | 03 வாகனங்களுக்குரிய ஓட்ட அட்டவணை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை |
| (ஆ) | இலங்கைக் குடியரசின் 2005 யூன் 08 ஆந் திகதிய 1396/18 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட விதி | சபை கூட்டங்களுக்கக சமுகமளிக்காத 15 உறுப்பினர்களுக்காக 28 சந்தர்ப்பங்களின் போது உறுப்பினர் படியாக ரூபா 140,000 கூட்டுத்தொகையான பணம் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) | 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் உள்ளூராட்சி, வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சரினால் வெளியிடப்பட்ட 1986 மார்ச் 10 ஆந் திகதிய 392/9 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியின் கட்டளைக் கோவையின் 22(1) ஆம் இலக்க கட்டளை | விற்பனை செய்யப்படுகின்ற காணியின் அளவில் 10 சதவீத நிலம் பொதுச் செயற்பாடுகளுக்காக சபைக்கு உரித்துறுதியின் மூலம் வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும் விலகொலதெனிய வத்தையில் 4 ஏக்கர் 25.64 பேர்ச் ஏலத்தில் விற்பனை செய்தல் தொடர்பில் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

### 1.3.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தலைவருக்கு எரிபொருளின் முற்பணமாக 10 சந்தர்ப்பங்களின் போது ரூபா 500,000 தொகை இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 371(2)(ஆ) இன் ஏற்பாடுகளுக்கு முரணாக வழங்கப்பட்டிருந்ததுடன் மேற்கூறப்பட்ட முற்பணம் வழங்குவதற்காகப் பெறப்பட்ட அங்கீகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பொருள் மெய்மையாய்வு அறிக்கை மூலம் சிபாரிசு செய்யப்பட்டவைகள், நிதிக் கூற்றுக்கள் அங்கீகரிக்கப்படும் வரை அகற்றப்படாதிருந்ததுடன் ரூபா 1,881,708 கூட்டுத்தொகையான பொருட்களுக்காக நிதிக்கூற்றுக்களின் மூலம் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,916,769 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,192,313 ஆக இருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி செயற்பாடுகளின் மிகை 65 சதவீதத்தினால் குறைவடைந்திருந்ததுடன் இதற்கு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் ஆதனவரியும் வாடகை வருமானமும் குறைவடைந்தமையும், ஒட்டுமொத்த மீண்டெழும் செலவினத்தின் அதிகரிப்பும் பிரதானமாகத் தாக்கமளித்திருந்தன.

### 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| வீதவரியும் வரியும் | 131 | 37 | - |
| வாடகை | 1,500 | 14 | - |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 637 | 531 | 207 |
| ஏனைய வருமானம் | 13,898 | 13,856 | - |

**2.3.2 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக்கட்டணமும்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது 2012 ஏப்ரல் முதல் 2012 ஒக்தோபர் வரை நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 4,894,458 தொகை கிடைத்திருந்ததுடன் 2013 யூலை மாதம் வரை மாத்திரம் வருமானம் இனங்காணப்பட்டிருந்தது.

(ஆ) 2011 சனவரி மாதம் முதல் 2012 ஒக்தோபர் மாதம் வரையிலான காலத்திற்குரிய காணிப்பதிவாளர் நாயகத்திடமிருந்து கிடைக்கவேண்டிய ரூபா 12,660,076 தொகையான முத்திரைக் கட்டண வருமானம் மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த போதிலும் 2012 ஒக்தோபர் மாதம் முதல் எந்த வருமானமும் இனங்காணப்பட்டு பெற்றுக்கொள்வதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.3 செயன்முறைக் கட்டணம்**

செயன்முறைக் கட்டணமாக ரூபா 150,000 படி ரூபா 300,000 மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன் 14 பொருத்தப்பட்டவைகள் தொடர்பாக எவ்வித கட்டணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.3.4 ஏனைய வருமானம்**

(அ) முச்சக்கர வண்டி வாகனம் அறவிடல் தொடர்பாக உப விதியொன்று தயாரிக்கப்பட்டிருந்ததுடன் கணக்காய்வுத் திகதியான 2014 ஏப்ரல் 09 ஆந் திகதி வரையிலும் 02 முச்சக்கர வண்டி சங்கங்களிடமிருந்து விண்ணப்பங்கள் பதிவிற்காகக் கிடைத்திருந்த போதிலும் அது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் விளம்பர அறிவித்தல் வருமான சேகரிப்பு தொடர்பாக உப விதியொன்றைத் தயாரித்து 2013 இல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்த போதிலும் எந்த வருமானத்தையும் உழைப்பதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) கைத்தொழில் வரி, வியாபார அனுமதிப் பத்திரம் மற்றும் வியாபார வரிகளை அறவிடுதல் தொடர்பாக சபைக்குக் கிடைக்கின்ற விண்ணப்பங்களில் சுகாதார வைத்திய நியம உத்தியோகத்தரின் சிபாரிசு, பொது சுகாதார பரிசோதகர்களினால் வியாபார நிலையங்கள் பரீட்சிக்கப்பட்டமைக்கான அறிக்கை மற்றும் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கும் போது சிபாரிசு பெறப்படாது அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன. மேலும் சபை அதிகாரப் பிரதேசத்தில் உரிய கைத்தொழில்கள் தொடர்பான மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பொருள் மெய்மையாய்வு அறிக்கையில் சிபாரிசு செய்யப்பட்ட ஏலத்தில் விற்பனை செய்யக்கூடிய அழிக்கக்கூடிய மற்றும் பழுதுபார்க்கக்கூடிய ரூபா 1,857,500 பெறுமதியான பொருட்கள் தொடர்பாக கணக்காய்வுத் திகதியான 2014 மே 30 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வின் போது 241 பொருள் அலகுகள் மெய்மையாய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின் போது ஜேசீபீ இயந்திரத்திற்காக ரூபா 2,769,943 செலவினம் செய்யப்பட்டிருந்த போதிலும் அவ்வருடங்களின் போது முறையே 614 இயந்திர மணித்தியாலங்கள் மற்றும் 941 இயந்திர மணித்தியாலங்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் ஜேசீபீ இயந்திரத்தின் எரிபொருள் தாங்கியின் ஆகக்கூடிய கொள்ளளவு 110 லீற்றராக இருந்த போதிலும் எரிபொருள் நிரப்புதல், ஓட்ட அட்டவணை, கொள்வனவுகள் மற்றும் பற்றுச்சீட்டுக்களுக்கிடையே வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(ஆ) முன்னைய ஆண்டின் போது ரூபா 247,000 தொகை செலவில் பிரீமிக்ஸ் (முற்கலவை) செயற்திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட 26 கியூப் மணல் இருப்பில் 2014 ஏப்ரல் 09 ஆந் திகதிய பௌதீக பரிசோதனையின் படி 06 கியூப் மணல் அளவில் சபை வளவில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. அதன்படி ரூபா 190,000 பெறுமதியான 20 கியூப் மணல் பயன்படுத்தப்பட்ட செயற்பாடுகள் தொடர்பான தகவல்கள் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்படவில்லை.

**3.3 வெளிநாட்டுப் பிரயாணம்**

(அ) வெளிநாட்டு சுற்றுலாவிற்காக செலவிடப்படுகின்ற சகல செலவினங்களும் வெளிநாட்டு அமைப்புக்களினால் செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2013 பெப்ரவரி 26 ஆந் திகதி முதல் மார்ச் 03 ஆந் திகதி வரை தாய்லாந்து சுற்றுலாவிற்காக பதின்மூன்று உறுப்பினர்களுக்கு ரூபா 90,000 படி சபை நிதியத்திலிருந்து ரூபா 1,170,000 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) மேலும் வெளிநாட்டு சுற்றுலாவிற்காக பங்குபற்றுபவர்கள் நாட்டிலிருந்து வெளிச் செல்வதற்காக சனாதிபதி செயலாளரின் 2012 யூன் 11 ஆந் திகதிய சீஎஸ்ஏ/1/1/16 ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி அதிமேதகு சனாதிபதி அவர்களின் அனுமதி பெறப்பட வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் பயிற்சி முடிவில் பெறப்பட்ட அறிவை உள்நாட்டில் பயன்படுத்தும் முறை தொடர்பான அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2010 ஒக்தோபர் 11 ஆந் திகதிய நி.தி.அ/1/2010/1 ஆம் இலக்க நிதி, திட்டமிடல் அமைச்சின் செயலாளரினதும் திறைசேரி செயலாளரினதும் சுற்றறிக்கையின் 2(i) ஆம் பிரிவின் பிரகாரம் வெளிநாட்டுப் பிரயாணப் படிகள் மற்றும் அது தொடர்பான செலவினங்களை பெற்றுக்கொள்வதற்காக முறையான பிரகாரம் கடமை விடுமுறை அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும், எவ்வித விடுமுறை அங்கீகாரமும் இன்றி தாய்லாந்தில் நடைபெற்ற பயிற்சி செயலமர்விற்காக பங்குபற்றிய 13 உறுப்பினர்களுக்காக நாளொன்றிற்கு அமெரிக்க டொலர் 30 படி அமெரிக்க டொலர் 2,340 ஆக ரூபா 297,882 தொகை சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) 2013 ஒக்தோபர் 20 ஆந் திகதி முதல் ஒக்தோபர் 25 ஆந் திகதி வரை பிரதேச சபை உறுப்பினரொருவருக்கு இந்தோனேசியாவில் சுற்றுலாவிற்காக சபை நிதியத்திலிருந்து

செலவினங்களைச் செய்வதற்கு பிரதம அமைச்சரின் அங்கீகாரம் கிடைத்திருந்ததாக உள்ளூராட்சி ஆணையாளரின் அறிவித்தலின் படி 2013 ஒக்தோபர் 10 ஆந் திகதி 950 ஆம் இலக்க உறுதிச்சீட்டின் மூலம் ரூபா 150,000 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும் இந்த உறுப்பினருக்காக தாய்லாந்து சுற்றுலாவிற்கும் பிரயாணச் செலவினமாக 2013 பெப்ரவரி 26 ஆந் திகதி முதல் மார்ச் 03 வரை ரூபா 112,914 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. நாட்டிலிருந்து வெளியே செல்வதற்காக அதிமேதகு சனாதிபதி அவர்களின் அனுமதி பெறப்பட்டிராததுடன் சுற்றுலாவிற்காக பங்குபற்றுவதற்கு வெளிநாடு செல்வதற்கு முன்னர் விடுமுறை அங்கீகரித்துக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் உறுப்பினர்களின் விடுமுறை அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. மேற்கூறப்பட்ட சுற்றுலாவிற்காக அவர்கள் பங்குபற்றினார்களா என உறுதிப்படுத்திக் கொள்வதற்கான எவ்வித ஆவணமும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

இந்தோகேசியா உள்ளூராட்சி முறைமை தொடர்பாக பெறப்பட்ட அறிவினை உள்நாட்டு ரீதியாக பயன்படுத்திக்கொள்ளும் முறை தொடர்பான அறிக்கையொன்று பயிற்சி முடிவடைந்து 06 மாதங்கள் கடந்திருந்த போதிலும் அவ்வாறான அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பதிவு இலக்கம் 60 – 6849 என்ற லொறி 2012 ஆம் ஆண்டு முதல் ஓட முடியாத நிலையில் சபை வளவில் தரித்து கைவிடப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதிக் கோவையின் 5(7) இன் பிகாரம் நிதி மற்றும் களஞ்சியம் தொடர்பாக போதியளவான உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.2 பாதீட்டுக் கட்டுபாடு

மீளாய்வாண்டிற்காக 20 செலவின விடயங்களுக்கு ஒதுக்கப்பட்ட ரூபா 295,500 தொகையான நிதி ஏற்பாட்டு எவ்வித செலவினமும் செய்யப்படாது சேமிக்கப்பட்டிருந்ததுடன் 23 செலவின விடயங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் ரூபா 4,743,409 தொகை சேமிக்கப்பட்டிருந்தது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு